அமைத்துக் கொடுக்க முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி மற்றும் விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, உசிலம்பட்டி தொகுதியைப் பின்தங்கிய தொகுதி என்று சொன்னார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிருக்கின்றபோது தமிழகத்திலே எந்தத் தொகுதியும் பின்தங்கிய தொகுதியாக இல்லை. அனைத்தும் முன்னோடித் தொகுதிகளாக இன்றைக்குத் திகழ்ந்து கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு இந்த ஆண்டு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினா வரிசை எண் 122, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

122—

பகுதிநேர நியாய விலைக் கடை

***16840—திரு. அ. பிரபு:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஊராட்சி ஒன்றியம், தியாகை ஊராட்சி, கடம்பூர் பகுதிக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,*

‘மாபெரும் சபையினில் நீ நடந்தால் உனக்கு மாலைகள் விழ வேண்டும்;

ஒரு மாற்றுக் குறையாத மன்னவன் இவன் என்று போற்றி புகழ வேண்டும்' என்றும்,

'ஊருக்கு உழைச்சாலே
ஏழையின் உரிமையை மதிச்சாலே
பெருமைகள் தேடி வரும்,
தானே பதவிகள் நாடி வரும்'

என்றும் தான் நடித்த அத்தனைத் திரைப்படங்களிலும் முத்தான, அற்புதமான கருத்துகளை தமிழர்களுக்கு வழங்கிய, மாண்புமிகு மனிதப் புனிதர் (குறுக்கீடுகள்) பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய நூற்றாண்டு விழா துவக்கத்தை தெய்வீகம், தியாகம் மற்றும் சங்கம் வைத்து தமிழ் வளர்த்த தேன் மதுரையில் முதன்முதலாக நடத்திட்டதோடு, 'என் மக்கள் இனி யாரிடமும், எதற்காகவும் கையேந்தாத சூழ்நிலையை நான் உருவாக்குவேன், அதுதான் என் இலட்சியம்' என்று உருவாக்கிக் கொடுத்த தமிழகத்தை, இன்றைக்கு அம்மாவின் வழியில் அற்புதமான ஆட்சியை முன்னெடுத்துச் செல்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்தில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விழாவுக்கு வருகை புரிந்த மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மற்றும் அவர்களுடன் வருகை புரிந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்களுக்கும் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மேலும், இவ்விழாவில் மதுரை மாட்டுத்தாவணியில் உள்ள பேருந்து நிலையத்திற்கு 'எம்.ஜி.ஆர். நூற்றாண்டு ஒருங்கிணைந்த பேருந்து நிலையம்' என (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பெயரைச் சூட்டியும், ஜீவநதிபோல் வந்து எங்கள் தாகம் தீர்த்து மகிழ முல்லைப் பெரியாறு அணையிலிருந்து நேரடியாகக் குழாயின்மூலம் மதுரை மாநகருக்கு குடிநீர் கிடைக்கும் வகையில் சிறப்புக் குடிநீர்த் திட்டத்தை வழங்கி, மதுரை மக்களுக்கு இனிமேல் குடிநீர் பிரச்சினையே இராது (மேசையைத் தட்டும் ஒலி) என்று எண்ணும் வகையில் மதுரை மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்திய நல்ல மனமும், நல்ல இதயமும் கொண்ட மதுரையின் பென்னிகுயிக்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அக்குடிநீர்த் திட்டத்தைத் தயாரித்து வழங்கிய, உள்ளாட்சியை நல்லாட்சியாக நடத்திவரும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், அன்புத் தம்பி திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மதுரை மக்களின் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர், நீங்கள் என்னைப் பார்த்துப் பேசுங்கள். கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் தியாகை பகுதியில் 422 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடைக்கு. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்) திரு. எஸ்.ஆர். இராஜா, ப்ளீஸ். . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் பேசுகிறார், கேளுங்கள். அவை முன்னவர் பேசும்போது, உட்கார்ந்து கேளுங்கள். அவை முன்னவர், பேசுங்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அருள்கூர்ந்து, அவருடைய தலைவர்களை, அவருடைய முதலமைச்சரை. . . (குறுக்கீடுகள்) இருங்கள். திரு. எஸ்.ஆர். இராஜா, ஒரு நிமிடம் இருங்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அவர் நன்றி சொல்லிவிட்டார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவை முன்னவர் பேசுகிறார், கேளுங்கள். (குறுக்கீடுகள்) அவை முன்னவர் பேசுகிறார். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: தவறு எதுவும் இல்லை. திரு. எஸ்.ஆர். இராஜா, உட்காருங்கள். தவறு எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அவை முன்னவர், சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியாதது ஒன்றும் இல்லை. திரு. எஸ்.ஆர். இராஜா போன்றவர்களுக்குத் தெரியும். இது நடைமுறையில் இருந்திருக்கிறது. இன்றைக்கு அல்ல. அம்மா அவர்கள் இருக்கின்றபோது, கேள்வி நேரங்களில் இதுபோன்று வாழ்த்துவதும், உங்கள் கட்சியில் உள்ளோர் வாழ்த்துவதும் நடைமுறையில் இருந்திருக்கிறது என்பதை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இதைச் சொல்வது பெரிய தவறல்ல. உங்கள்மீது குற்றச்சாட்டுகள் சொன்னால் மட்டும்தான் நீங்கள் அதில் கேள்வி கேட்கலாமே தவிர வாழ்த்துவதில் தவறில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர், நீங்கள் பதில் சொல்லுங்கள்.

முற்பகல் 10—20

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் தியாகை பகுதியில் 422 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேர நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இந்நியாய விலைக் கடைக்கு உட்பட்ட கடம்பூர் பகுதியில் 50 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. அரசின் நிபந்தனையின்படி கடம்பூர் பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.

திரு. அ. பிரபு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி தொகுதி, தியாகதுருகம் ஒன்றியம், தியாகை ஊராட்சியில் உள்ள செல்லூர் தாய் கடையில் சுமார் 422 குடும்ப அட்டைகள் உள்ளன என்றும், கடம்பூர் பகுதியில் 50 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளதாகவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். ஆனால், கடம்பூர் பகுதியிலே சுமார் 125 குடும்ப அட்டைகள் உள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைப் பரிசீலனை செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அந்தக் கடையினைப் பிரித்து ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு ஆவன செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், கள்ளக்குறிச்சி தொகுதி, கள்ளக்குறிச்சி நகராட்சியிலே, யாமப்பேர் பகுதியிலே அமைந்திருக்கும் கடை எண் 5–க்கு, 2015 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து நிதியொதுக்கப்பட்டு கடை கட்டப்பட்டுள்ளது. அந்த யாமப்பேர் கடை எண் 5–ல், சுமார் 1,250 குடும்ப அட்டைகள் உள்ளன. அதுமட்டுமல்லாமல், கிலோ மீட்டர் மட்டும்தான் குறைவாக இருக்கிறது. எனவே, கிலோ மீட்டரைக் கருத்தில் கொள்ளாமல், அந்தப் பகுதியிலே வாழும் மக்களின் நலன் கருதி, சுமார் 450 குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெறும் வகையிலே உடனடியாக அந்தக் கடையைப் பிரித்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடம்பூர் பகுதிநேர நியாய விலைக் கடையில் 125 குடும்ப அட்டைகள் இருக்கின்றன என்றும், எனவே அதைப் பிரித்துத் தர வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்; துறைரீதியாக அது ஆய்வு செய்யப்படும். ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை முன்னெடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துச் செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், 1,250 குடும்ப அட்டைகள் இன்னொரு கடையில் இருக்கிறது, கிலோ மீட்டர்தான் குறைவாக இருக்கிறது, அதையும் பிரித்துத் தர வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். எனவே, அதுகுறித்தும் விரைவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இசைவைப் பெற்று, துறைரீதியாக உறுதியாக அது பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.

திரு. அ. பிரபு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி தொகுதி, சின்னசேலம் ஒன்றியத்தில் பூண்டி தாய்க் கடையில் சுமார் 578 குடும்ப அட்டைகள் உள்ளன. விநாயகபுரம் பகுதியில் சுமார் 150–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் உள்ளார்கள். அந்த 150–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்கள் நியாய விலைக் கடைக்குச் செல்ல வேண்டுமென்றால் நெடுஞ்சாலையைக் கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, அந்தப் பகுதி மக்கள் பயன்பெறும் வகையிலே இந்தக் கடையையும் பிரித்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு கூட்டுறவுச் சங்கம் என்பது குறைந்த நிதி ஆதாரத்துடன் செயல்படுகின்ற ஒரு சங்கம் ஆகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 1,000–க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கின்றார். இரண்டு நியாய விலைக் கடைகளுக்கும் இடையிலே 1½ கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும்; மலைப் பகுதியாக இருந்தால் 1 கிலோ மீட்டர் தூரம் இருக்க வேண்டும். குடும்ப அட்டைகளைப் பொறுத்த அளவிற்கு 150 கார்டுகள் பகுதிநேர நியாய விலைக் கடையிலும், அந்த கார்டை பிரித்த பிறகு, நகர்ப்புறமாக இருந்தால் 1,000 குடும்ப அட்டைகள் அல்லது 800 குடும்ப அட்டைகள், கிராமப்புறமாக இருந்தால் 500 குடும்ப அட்டைகள், மலைப்

பிரதேசமாக இருந்தால் 400 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்று விதி இருக்கிறது. எனவே, இதுபோன்ற சட்ட விதிகள் இருப்பதனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல, கூடுதலாகக் குடும்ப அட்டைகள் இருக்கும்பட்சத்தில், சட்ட விதிகளுக்கு உட்பட்டு, அதை உடனடியாகப் பிரிக்க வேண்டுமென்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கனிவான உத்தரவைப் பெற்று, அரசின் சார்பாக உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ் அவர்கள்.

திரு. ஒய். பிரகாஷ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகத் தலைவர் அவர்களையும், கழக செயல் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.

என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதியில், மாடுகல் ஊராட்சி இருக்கிறது. அந்த ஊராட்சியில் திம்மேனட்டி என்ற கிராமம் சுமார் 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இது காடுகள் நிறைந்த பகுதியாக உள்ளதால் மக்கள் 7 கிலோ மீட்டர் தொலைவிற்குச் சென்று, நியாய விலைக் கடையில் பொருட்கள் வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, திம்மேனட்டி என்ற கிராமத்தில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடையைத் திறக்க இந்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தாய்க் கடையில் எவ்வளவு குடும்ப அட்டைகள் இருக்கிறதென்று சொல்லவில்லை. இருந்தபோதிலும், 7 கிலோ மீட்டர் தூரம் என்பது நிச்சயமாகக் கனிவோடு பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. 7 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து வருவது அதிகமான சிரமத்தை மக்களுக்குக் கொடுக்கும். மாண்புமிகு அம்மா அவர்கள் இதுபோன்ற

சிரமங்களைத் தீர்க்கின்ற வகையில்தான், கடந்த 6 ஆண்டுகளில் 2,226 கடைகளைக் கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். 37 நகரும் கடைகள் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, உறுதியாக துறைரீதியாக பரிசீலிக்கப்பட்டு, சட்ட விதிகள் இடம் கொடுக்காதபட்சத்திலும், நிச்சயமாக அது மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக, அதற்கு விதிவிலக்கு ஏதும் கொடுக்க முடியுமா என்பதைத் தெரிந்துகொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'என் இல்லமும் உள்ளமும் தமிழகம்தான்' என மக்களாட்சி செய்த மகத்தான முதலமைச்சர், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்னடிகளைப் போற்றி வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) அவர் வழியிலே பொன்னான ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற தமிழக முதல்வர் அவர்களையும் அன்போடு வணங்குகிறேன். கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் வட்டம், காட்டுமன்னார்கோவில் ஒன்றியம், ஆச்சாள்புரம் ஊராட்சியில் இருக்கக்கூடிய நியாய விலைக் கடையைப் பிரித்து, குச்சிப்பாளையத்தில் ஒரு பகுதி நேர நியாய விலைக் கடை அமைத்துத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தம்பி முருகுமாறன் அவர்கள், தாய்க் கடையில் எவ்வளவு குடும்ப அட்டைகள் இருக்கின்றன என்பதைச் சொல்லவில்லை. இருந்தபோதிலும், உரிய சட்ட விதிகளுக்கு உட்பட்டு அந்தக் கடைகளைப் பிரித்துக் கொடுக்க விரைவாக, துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜூலை 4]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள். (குறுக்கீடு) இதுவரையில் அவர் கேள்வியே கேட்கவில்லை. இப்போதுதான் கேள்வி கேட்கிறார். துணைக் கேள்வி இன்றைக்குத்தான் கேட்கிறார்.*

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் சுமார் 17 செட்டில்மென்ட்கள் உள்ளன. அதில் உடுமலை வனச் சரகத்திற்கு உட்பட்ட காட்டுப்பட்டி, மாவடப்பு, பூச்சிகொட்டான்பாறை, குழிப்பட்டி, குருமலை, மேல்குருமலை, கருமுட்டி ஆகிய பகுதிகளில் குறிப்பாக, மாவடப்பு மற்றும் காட்டுப்பட்டியிலுள்ள கடைகள் இராவணபுரத்தினுடைய பகுதி நேரக் கடையாக சுமார் 140 குடும்ப அட்டைகளுடன் செயல்படுகின்றன. மீதமுள்ள குழிப்பட்டி, மேல்குருமலை, குருமலை, பூச்சிகொட்டான்பாறை பகுதிகளில் உள்ள சுமார் 317 குடும்ப அட்டைகள் உள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு தனி கடையிலிருந்து பொருட்கள் வழங்கப்படுகின்றன. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த இரு கடைகளையும் ஒரே முழுநேரக் கடையின்கீழ் கொண்டுவந்தால் அந்த மக்கள் தேவையான பொருட்களை அந்த இடத்திலே வாங்குவதற்கான வாய்ப்பு அமையும் என்பதோடு மட்டுமல்லாமல், இரு கடைகளைப் பராமரிப்பதால் ஏற்படுகின்ற போக்குவரத்துச் சிரமங்களும் குறையும். மேலும், இந்த இரு கடைகளுக்கும் வருகின்ற பொருட்கள் சுமார் 50 கிலோ மீட்டர் பயணத்திற்குப் பின்னால்தான் வந்து சேருகின்றன. ஆகவே, ஒரே நிருவாகத்தின்கீழ் அந்த இரு கடைகளும் செயல்பட வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அதோடு கேள்வியை முடியுங்கள்.*

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: *மேலும், அமராவதி வனச் சரகத்தின்கீழ் செயல்படுகின்ற தளிஞ்சி பகுதியில் ஒரு பகுதி நேரக் கடை உத்தரவாகியும் இன்னும் செயல்படாமல் உள்ளது. ஆகவே, அந்தக் கடையும் செயல்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

[*2017 ஜூலை 4*

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், குழிப்பட்டி, மாவடப்பு போன்ற பகுதிகள் மலைக் கிராமங்கள். இந்த மலைக் கிராமங்களைப் பொறுத்தளவில் குழிப்பட்டி என்பது தரைப் பகுதியிலிருந்து 75 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. மலைக்குள் மட்டும் 55 கிலோ மீட்டர் தூரம் போக வேண்டும். இது இராவணபுரம் தொடக்கக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின்மூலமாகத்தான் ஏற்கெனவே செயல்பட்டு வந்தது. இங்கிருந்துதான் வண்டி வாகனம் போய்க் கொண்டிருந்தது. இப்போது கோயம்புத்தூரிலிருந்து அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக உடுமலைப்பேட்டையிலிருந்து குழிப்பட்டிக்கும் மாவடப்புக்கும் கொண்டு செல்லப்படுகிறது. குழிப்பட்டிக்கும் மாவடப்புக்கும் இடையே ஏறத்தாழ 15 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. ஆனால், இந்த இரு கடைகளையும் ஒரே கடையாக மாற்ற வேண்டுமென்று நீங்கள் கோரிக்கை வைக்கிறீர்கள். அதனால் மக்களுக்கு வீண் சிரமம். மலைப் பகுதிகளில் மக்களுக்கு வீண் அலைச்சல் ஏற்படக் கூடாது, மலையில் மழை வேறு அடிக்கடி பெய்யும்; இதுமாதிரி இருக்கக்கூடிய சூழ்நிலையில்தான் மாண்புமிகு அம்மா அவர்களால் இந்தியாவில் எந்த ஒரு முதலமைச்சரும் செயல்படுத்தாத ஓர் அற்புதமான திட்டமான, நகரும் நியாயவிலைக் கடைகள் திட்டத்தை* (மேசையைத் தட்டும் ஒலி) *அம்மாவினுடைய அரசுதான் செயல்படுத்தியது. தமிழ்நாட்டில் மட்டும்தான் இதைச் செய்து கொண்டிருக்கிறோம். மற்ற மாநிலங்களில் விலைக்கு விற்கிறார்கள். தமிழ்நாட்டில் இதுபோன்று செய்திருக்கிறார்கள். ஆனால், ஒரு கடையாகக் கொண்டு வந்தால் அது நிருவாகத்திற்குச் சிறப்பாக இருக்குமென்று சொல்கிறார். ஆனால், அந்தப் பகுதி மக்களுடைய எண்ணம் எப்படி இருக்கிறது என்பதை அறிந்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை உறுதியாக பரிசீலிக்கப்படும். ஏற்கெனவே பிரிக்கப்பட்ட இன்னொரு கடையும்கூட இன்னும் செயல்படாமல் இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார். அதுகுறித்து துறை சார்பாக நடவடிக்கை எடுத்து, துறை ரீதியாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய இசைவைப் பெற்று நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*